# *சாராம்சம்*

## *ச.நா.நி (IMF) உலக வங்கி ஆ.அ.வ.(ADB)ன் நோக்கம்*


# தனியார்மயமாக்கல்

## *'சந்தேகத்திற்குரிய ஒப்பந்தங்கள்'*

## இலங்கையில் என்னவொரு முரண்பாடு

***கூகிள் புத்தகங்கள் –*** ***'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 2:'Dubious Deals' in Sri Lanka – What a Paradox!'***

***http://www.consultants21.com/fraud-&-corruption-exposures-new.php***




*அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 596*

நூலாசிரியர் இப்புத்தகத்திற்கு மிகவும் பொருத்தமாக *(Dubious Deals)* சந்தேகத்திற்குரிய ஒப்பந்தங்கள் என்று தலைப்பிட்டுள்ளார். அதிர்ச்சிகரமான முறையில், ஆழமான ஆய்விற்கு பின் இலங்கை அரசாங்கத்தின் குறிப்பிட்ட சில பரிமாற்றங்களும் நடவடிக்கைகளும் பாரிய அளவிலான மோசடியுடன் தொடர்பானது என்பதனை வெளிப்படுத்துவதோடு, சமூக அரசியல் எதிர்த்தங்களையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

அரசியல்வாதிகள் அதிகாரங்களை அடையும் பொருட்டு தாம் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற நிலையில் தேர்தல் மேடைகளில் ஊழல் மற்றும் மோசடிகளுத்து எதிராக கூச்சலிட்டாலும் தாம் அதிகாரங்களை கைப்பற்றிய உடனேயே முற்றிலும் வேறுபட்ட விதமாக நடந்துகொள்கின்றனர். இவ்வாறு கூச்சலிடுவது அதிகாரத்திற்கு வருவதற்காகவேயன்றி கவலைக்குரிய பொருளாதார நிலையில் துன்புறும் தம்மை தேர்வு செய்த மக்களின் நிலையினை கருத்தில் கொள்வதில்லை

இவ்விதமான நடத்தையினால் பொது சொத்து பரிமாற்றங்களின் போது அதிர்ச்சியூட்டும் விதத்தில் மோசடி மற்றும் ஊழலில் வெட்கமற்றமுறையில் ஈடுபட்டு அதே ஊழல் மோசடி எனும் புதைகுழியில் சிக்கியிருத்தல் என்ற கவலைக்குரிய யதார்த்தமும் இப்புத்தகத்தில் வெளிப்பட்டுள்ளது

இவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்காண பிரதான காரணங்களுள் ஒன்றாவது, தேர்தல் காலங்களிலே அரசியல் அதிகாரங்களை பெறும் பொருட்டு அரசியல்வாதிகளுக்கு வர்த்தக சமூகம் நிதியுதவி அளிக்கின்றது, எனவே தாம் அதிகாரங்களுக்கு வந்தவுடன் இவ் வர்த்தக சமூகங்களுக்கு கடனாளிகளாகவும் அவர்களுக்கு தமது தேர்தல் பிரச்சாரங்களுக்கு நிதியுதவியளித்தமைக்கு ஈடாக வருமானங்களை ஈட்டுவதற்கு சந்தர்ப்பங்களை வழங்கும்படிக்கும் கட்டுப்பட்டவர்களாகின்றனர். இதற்கமைய இவிக்கட்டான சூழ்நிலையில் தமது வாக்குகளுக்கு சரியான பெறுமதி இன்றி மேலும் வறுமைக்கு தள்ளப்படுகின்றனர்.

இப்புத்தகத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் ஆய்வுகளின் விபரங்கள், இதனை வசிக்கும் வாசகர்களுக்கு இவை அரசியல்வாதிகளுக்கும் மூத்த பொது அதிகாரிகளுக்கும் இடையிலான பரிவர்த்தனைகளாக மாத்திரம் இல்லாது அவர்கள் இதனை மேற்கொள்ளும்படி உள்ளூர் மற்றும் வெளிநாடுகளின் தந்திரமான அதிகாரமுள்ள வர்த்தகர்களாலும் அவர்களது கைக்கூலிகளாலும் உந்தப்பட்டிருப்பார்கள் என்பதனை தெளிவாக புரிந்துகொள்ளமுடியும்

இதற்கமைய *IMF* (சர்வதேச நாணய நிதியம்) உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கை அரசினை தனியார்மயமாக்களுக்கான நடைமுறைகளுக்கு உந்திய போதும் உண்மையில் வெளிப்பட்டது யாதெனில் அரசின் சொத்துக்களின் விற்பனையின் போது பாரிய

மோசடிகளும் ஊழலும் நடைபெற்றமையே. இப்பரிவர்த்தனைகள் சட்ட விரோதமாகவும், மோசடியாகவும் அமைந்த நிலையில் இச்சர்வதேச நிறுவனங்களின் நோக்கத்திற்கு ஆபத்தினை ஏற்படுத்தி, தனியார்மயமாக்கல் என்ற போர்வையில் சில பரிமாற்றங்கள் சட்டவிரோதமாகவும், மோசடியாகவும், ஊழல் மிக்கதாகவும் இருந்ததனை நூலாசிரியர் வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் 1994 நவம்பர் இல் இலங்கையின் ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் பதவியேற்ற போது நிதி அமைச்சராகவும் அவரே காணப்பட்டார், அப்போது நிதி அமைச்சின் செயலாளரான A. S. ஜெயவர்தன வினூடாக நிதி அமைச்சின் ஆலோசகராக பணியாற்ற வரும்படி நூலாசிரியரிற்கு அழைப்பு விடுத்திருந்தார். இலங்கை பாராளுமன்றத்தில் ஜனவரி 1995 இல், ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவினால் தயார்செய்யப்பட்ட கொள்கை பிரகடமானது இப்புத்தகத்தில் முழுமையாக சேர்க்கப்பட்டுள்ளது.

**Policy Statement**

*by*
**Her Excellency**
**Chandrika Bandaranaike Kumaratunga**
**President of the**
**Democratic Socialist Republic of Sri Lanka**

**1995**

இக் கொள்கை அறிக்கையானது வெறுமனே ஓர் கற்பனைக் கதையாகவே காணப்பட்டது. இதில் கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை குறிப்பாக தனியார்மயமாக்கலை, பொதுச் சொத்துக்களின் கொள்ளையடிப்பு என கடுமையாக சாடியிருந்தபோதும், உண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கமும் கூட எழுந்தமானமாக தனியார்மயமாக்கலில் ஈடுபட்டதன மூலம் பொதுச்சொத்துக்கள் மோசடியான முறையில் மேலும் கொள்ளையடிக்கப்பட்டத்தை வெளிப்படுத்துகிறது.

இவ் அனர்த்தங்களையும் சங்கடங்களையும் முற்கூட்டியே பெப்ரவரி 1995 கால அளவில் உணர்ந்துகொண்ட நூலாசிரியர் நிதியமைச்சின் செயலாளர் A.S.ஜயவர்தன அவர்களுக்கு தாம் நிதியமைச்சின் ஆலோசகர் என்ற பொறுப்பிலிருந்து இவ்வாறான தடைகளின் நிமித்தம் விலக விரும்புவதாக அறிவித்தார். இதற்கமைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்ப்பினையும் தாண்டி நிதியமைச்சின் ஆலோசகர் என்ற பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார்

இதனைத்தொடர்ந்து இப்பொறுப்பிலிருந்து விலகிய ஒரு வருடத்தின் பின் நூலாசிரியர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு, அவர் நியமித்த பொது நிறுவன சீர்திருத்த சபையினால் மேட்கொள்ளப்பட்ட மோசடியானதும் ஊழல்மிக்கதுமான தனியார்மயமாக்கல் குறித்து, அதிலும் குறிப்பாக் பெருந்தோட்டத் துறையும், சர்வதேச விமான நிலையத்தின் வரிவிலக்கு சந்தை என்பனவும் இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய இழப்பினை ஈட்டித்தந்ததுடன் பொது மக்கள் இந்த உண்மைகளை விமர்சிப்பதும் மேற்குறித்த அவரது கொள்கை அறிக்கைக்கு முற்றிலும் விரோதமானது என்பதனை தெரிவித்து 1996, ஜனவரியில் அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தார்.

ஜனவரி 1999 இல் வெளிப்பட்ட விடயங்கள் குறித்து நூலாசிரியரின் ஆய்வு ஆதாரங்களின் சில பகுதிகளுடன், ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் வயம்ப மாகாண சபை தேர்தலின் போ து கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற பயங்கரங்கள் குறித்து ஆட்சி சட்டங்கள் தலைகீழாக ஆக்கப்பட்டு மோசடிகள் வெளியரங்கமாக ஆட்சிசெய்தமை குறித்து ஒப்பிட்டு கண்டித்தமை, அவரது இரட்டை வேடத்தினை வெளிப்படுத்துகிறது.

நூலாசிரியரின் ஜனவரி *1999* இல் ஊடகங்களில் வெளியான ஆய்வுரீதியான கட்டுரை உண்மையினையும், யதார்த்தத்தினையும் வெளிப்படுத்தி இந்திய இலங்கை வர்த்தக ஒப்பந்தமான *Indo Lanka* சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தினை விமர்சிக்கிறதோடு எவ்வாறு இவ்வுடன்படிக்கையில் கடைசி நிமிட முக்கியமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பதனையும் வெளிக்காட்டுகிறது. இந்திய பிரதமர் அடல் பெஹாரி வாஜ்பாய் அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி அவர்களுக்கும் இடையில் மாத்திரம் நடைபெற்ற இரகசிய சந்திப்பின் பின்னர் ஏற்கனவே இரு நாட்டின் அதிகாரிகளாலும் இணங்கப்பெற்றிருந்த ஒப்பந்தத்தின் வரைபில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டது இவ்வொப்பந்தம் இந்திய மாநிலங்களால் அமுல்படுத்தப்படும் *para tariffs* என்றழைக்கப்படும் தீர்வை மற்றும் வரிகளை புறக்கணித்து இருந்தது. எனவே இறையாண்மை மிக்க இரு நாடுகளான இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் ஏற்படுத்தப்பட்ட இவ்வொப்பந்தமானது சமத்துவமாக அமைவதற்கு இவ் வரிகளும் தீர்வைகளும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும், ஆயினும் அது அப்படி அமையவில்லை .



Bilateral Free Trade Agreement between India and Sri Lanka

The two sides have held two rounds of negotiations on the Bilateral Free Trade Agreement. The enclosed draft Agreement reflects the status of negotiations. Agreement has been reached on all issues except for the following Articles and Annexures, which are subject to further negotiations:-

1. Article III(sub-clause 3)
2. Article X.
3. Annexures 'A' to 'F'

The draft Agreement reflecting the status of negotiations as on 15th December 1998 has been initialed by us today, the 15th December 1998.

For the Government of India

For the Government of Sri Lanka


மற்றுமொரு பொது மக்களால் விமர்சிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஊழலானது, பாகிஸ்தானின் தவக்கால் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட புத்தளம் சீமெந்து தொழிற்சாலையின் விற்பனையாகும். மார்ச் *1997* இல் நூலாசிரியரின், ஊடகங்களின் பிரசுரிக்கப்பட்ட ஆதாரத்துடனான ஆய்வு ரீதியான கட்டுரை சட்டவிரோதமான முறையிலும் சந்தேகத்திற்குரிய மோசடியான வகையிலும் இதன் பரிவர்த்தனைகள் இடம்பெற்றமையினை தெளிவாக வெளிக்கொண்டு வந்தது. இதனை அப்போதய வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் அவர்களாலும் கூட வெளிப்படையாக கண்டிக்கப்பட்டதுடன் இதனை உடனடியாக ஆராயும்படியாக இலங்கை அரசாங்கத்திற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

> *"இந்த அரசாங்கமானது தான் சொல்வதை உண்மையில் உறுதியாயிருக்கின்றது என்பதனையும் சந்தையில் இடம்பெறும் முறைகேடுகளை மன்னிக்கவோ நிலைத்திருக்கச்செய்யவோ ( அல்லது சாதாரண மொழிநடையில் வெள்ளையடிக்கப்பட) மாட்டாது என்பதனை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தனியார் துறையினரிடம் தெளிவுபடுத்த வேண்டும் என்பதனை நான் எனது சகாக்களிடம் மரியாதையுடனும் உறுதியாகவும் தெரிவிக்க விரும்புகிறேன். புத்தளம் சீமெந்து விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீதும் பொது மக்களின் மீதும் மொத்தமாகவும் கணக்கிடப்படும் அளவிலும் மோசடி நடைபெற்றிருக்கிறது. இந்த அமைச்சரவை இவ்விடயத்தினை பங்குச்சந்தையினை தக்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் மன்னிக்கக் கூடாது. நீண்ட காலத்திலே, பங்கு பரிமாற்றங்களும் சந்தேகத்திற்குரியவர்களால் உந்தப்பட்ட தனியார் துறையும் கடந்த அரசின் கீழ் இருந்தது போல மீண்டும் அவமரியாதைக்கும் தேசிய அக்கரையில் கேட்டினையுமே கொண்டுவரும்"*

இருந்தபோதும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் ஆக்ஸ்போர்ட பல்கலைக்கழகத்தின் அறிஞராக இருந்தும் இத்தகைய ஜனநாயக கொள்கையினை மதித்து, அமைச்சராக இருந்த தனது

*பொறுப்பிலிருந்து விலகவில்லை. பின்பதாக இலங்கையின் வர்த்தக உயர் நீதிமன்றம் இப்பரிவர்தனையினை வழக்கு இல.145/97 (1) இன்போது இரத்து செய்தது.*

*இதேபோன்று நூலாசிரியரால் 1997 ஆகஸ்ட் மாதத்திலே ஊடகங்களில் பிரசுரமான ஆதாரங்களுடனான ஆய்வு கட்டுரையில், சர்வதேச விமான நிலையத்தின் ஏகபோக தீர்வை விலக்கு விற்பனை நிலையத்தின் தனியார்மயமாக்கலின் போது ஐக்கிய இராச்சியத்தின் ஆல்பா ஏர்போர்ட் குரூப்ஸ் இற்கு கண்டிக்கத்தக்க முறையில் மேட்கொள்ளப்பட்ட விற்பனை இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பாரிய இழப்பினை ஈட்டித்தந்தது, அத்தோடு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பணியமர்த்தப்பட்ட அதிகரிகளால் கேள்விக்குரிய தீய முறைகளில் இத்ததனியார்மயமாக்கல் நடிப்பட்டது என்பதனை ஆதாரங்கள் மற்றும் தரவுகளுடன் வெளிப்படுத்துகிறது.*



SALE and PURCHASE AGREEMENT

BETWEEN

GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

AND

A.PHA AIRPORTS GROUP PLC

AND

ORIENT LANKA LIMITED

*அதே போல ஏப்ரல் 1997, இல் நூலாசிரியர் ஊடகங்களில் பிரசுரித்த ஆய்வுக் கட்டுரையில் ஆதாரங்கள் மற்றும் தரவுகளுடன், உருக்கிரும்பு கூட்டுத்தாபனத்தின் கேள்விக்குரிய தனியார்மயமாக்களின் போது எவ்வித வெளிப்படைத்தன்மையுமின்றி தென் கொரியாவின் டூசான் குழுவிற்கு விற்பனை செய்யப்பட்டதனை தெளிவாக வெளிப்படுத்துகிறது.*

*அவ்வண்ணமாகவே ஜூலை 1997 யிலும் நூலாசிரியர் ஊடகங்களில் பிரசுரித்த ஆய்வுக் கட்டுரையில் விசாலமான வரையறுக்கப்பட்ட மத்தேகம நெசவு ஆலையின் கேள்விக்குரிய தனியார்மயமாக்கலானது வெளிப்படைத்தன்மையில்லாது புதிரான முறையில் தென் கொரியாவின் வரையறுக்கப்பட்ட காபூல் கம்பெனிக்கு விற்பனை செய்யப்பட்டது தொடர்பில் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினார்.*

*நவம்பர் 1997யிலும் ஆதாரங்களுடனான ஆய்வுக்கட்டுரையில் நூலாசிரியர் இலங்கை டெலிகாம் நிறுவனத்தின் கேள்விக்குரிய தனியார்மயமாக்கலினைக்குறித்தும் அதிர்ச்சியூட்டும் வகையிலான தரவுகளை வெளிப்படுத்தி எழுதியுள்ளார். ஜப்பானின் நிப்போன் டெலிக்ராபிக் & டெலிபோன் கார்பொரேஷன் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டமையானது இலங்கையின் பொது மக்களின் பாரிய கூக்குரலுக்கு வழிவகுத்தது, வரிவிதிப்பின்றி 5 ஆண்டுகால ஏகபோக உரிமையும்*

ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட முறையில் முதல் 5 வருடங்களில் முறையே 25%, 25%,20%,15%,15% என்ற வீதத்தில் வருடாந்த கட்டண அதிகரிப்பதற்கான உரிமையும் அளிக்கப்பட்டு டெலிகாம் நிறுவனத்தின் கேள்விப்பத்திர செயல்முறையில் அதன் பெறுமதியினை கணிக்கும் வேளையில், கேள்விப்பத்திர ஆவணங்களில் சலுகைகள் குறித்தான விடயங்கள் எழுதப்படவில்லை, அவ்வாறு எழுதப்பட்டிருப்பின் கேள்விப்பத்திரம் முன்வைக்கும்படி ஆர்வமுள்ள பரந்துபட்ட சமூகத்தினை கவர்ந்திருக்கும்

SRI LANKA TELECOM LIMITED

**SHARE PURCHASE AGREEMENT**

Between

THE GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

(acting through the Secretary to the Treasury)

and

NIPPON TELEGRAPH AND TELEPHONE CORPORATION

Dated 5th August 1997

மேற்குறித்த சலுகைகளைப்பற்றி தெரியாது பிரதான மதிப்பீடு செய்பவர் இலங்கை டெலிகாம் இன் கேள்விப்பத்திர பெறுமதி கணிப்பின் போது அதன் மதிப்பீட்டின் அடிப்படையில் கேள்விப்பத்திரங்களைக் கோரினார். இதற்கமைய பிரதான மதிப்பீட்டாளர் இச்சலுகைகளை கணிப்பீட்டின்போது கவனத்தில் கொண்டிருந்தால் இலங்கை டெலிகாம் இன் விற்பனையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விற்பனை பெறுமதியினைக் காட்டிலும் அதிகளவாக அமைந்திருக்கும். இதற்கமைய இவ்விற்பனையானது இலங்கை அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பாரிய இழப்பினை ஏற்படுத்தி ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட ஜப்பானிய கம்பெனியையே செறிவூட்டியது. இவ்வாறான சலுகை நிபந்தனைகள் கேள்விப்பத்திர கோரிக்கைகளுக்கு முன் வெளிப்படுத்தப்படாமையானது ஓர் பாரிய குற்றமாகும், அவ்வாறு அவை வெளிப்படுத்தப்பட்டிருப்பின் நிச்சயமாக ஆர்வமுள்ள வேறு நிறுவனங்கள் இலங்கை டெலிகாம் இந்த பங்குகளை வாங்குவதற்கு கேள்விப்பத்திரங்களை முன்வைத்திருக்கும்

டிசம்பர் 1997 இல் நூலாசிரியர் ஊடகங்களில் பிரசுரித்த தரவுகளுடனான ஆய்வுக் கட்டுரையினை தொடர்ந்து அதன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக பிரான்ஸ் நாட்டு நிறுவனமான GCE அல்ஸத்தோமிடமிருந்து புகையிரத என்ஜின் கொள்வனவினை கண்டித்து நாட்டில் பெரும் கூச்சல் குழப்பங்கள் ஏற்பட்டன. இந்நிறுவனத்திடமிருந்து இதற்கு முன்னதாக எந்தவொரு கொள்வனவும் இடம்பெறவில்லை, இதன்போது பணியமர்த்தப்பட்ட 3 பேர் அடங்கிய கேள்விப்பத்திர கோரல் குழுவில் ஒருவர் மாத்திரம் எதிர்ப்பு தெரிவித்தநிலையில் GCE அல்ஸத்தோம் நிறுவனத்திடமிருந்தான கொள்வனவிற்கு அக்குழு பரிந்துரை செய்ததுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களும் தலையிட்டு தனது ஒப்புதலை அளித்திருந்தார்.

**"சிறுபான்மை கருத்து வேறுபாட்டு அறிக்கை**

*இலங்கை புகையிரதங்களுக்கான 10 மின்சார டீசல் என்ஜின்களின் கொள்வனவிற்கென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர கோரல் குழுவின் அறிக்கை (இலங்கை ரூபாவில்)*

*திரு. B.C.பெரேரா*
*தலைவர்*
*CATB*

*இலங்கை புகையிரதங்களுக்கான 10 மின்சார டீசல் என்ஜின்களின் கொள்வனவிற்கென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கேள்விப்பத்திர கோரல் குழுவின் அறிக்கை*

*XXXXXXXXXXXXXXXXXXXXXXXX*

1. *TEC இனால் பரிந்துரைக்கப்பட்ட சிலவற்றினை கவனத்தில் கொள்ள வேண்டாம் ஏனெனில் அவை சரியான கேள்வி பத்திர மதிப்பீட்டு நடைமுறைகளிலிருந்து விலகியுள்ளது.*

2. *எல்லா விதத்திலும் அமைவாகவுள்ள GCE அல்ஸத்தோம் கூட்டுத்தாபனத்தின் கேள்வியினை ஏற்றுக்கொண்டு,இலங்கை ரூபாய் 1,451,021,460 இற்கு 10 மின்சார டீசல் என்ஜினிகளை கொள்வனவு செய்யவும்*

*ஒப்பம்*
*G. D.சிறில் குணபால*
*ஜனாதிபதி செயலாளர்*
*நவம்பர் 10, 1997"*

இதேபோன்று ஏப்ரல் 1998 இல் ஆசிரியரின் தரவுகளுடனான ஆய்வு கட்டுரையில் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் எமிரேட்ஸ் விமான நிறுவனத்திடம் எவ்வாறு இலங்கை ஏர் லங்கா விமான நிறுவனம் தனியார்மயமாக்கல் நிமித்தம் விற்பனை செய்யப்பட்டமையானது நாட்டிலும் இலங்கை பாராளுமன்றத்திலும் பாரிய சர்ச்சையினை ஏற்படுத்தியது என்பதனை விபரமான ஆய்வுகளுடன் வெளிப்படுத்துகிறார். இதன்படி இப்பறிமாற்றங்கள் எழுந்தமானமாகவும் எந்தவித வெளிப்படைத்தன்மையுமின்றி இரகசியமான முறையில் நடைபெற்றமை வெளிப்படுகின்றது. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கான விசாரணை குழுவிற்கு இது தொடர்பான ஒரு முறையீட்டினை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த போதும் எந்தவித பெறுபேறும் பெறப்படவில்லை

AIR LANKA LIMITED

SHARE SALE AND PURCHASE AGREEMENT

Between

THE GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
(acting through the Secretary to the Treasury)
(as Seller)

and

EMIRATES, THE INTERNATIONAL AIRLINE OF THE U.A.E.
(as Purchaser)

Dated 30th March, 1998

IN WITNESS of which this document has been executed and delivered on the date which appears on page 1 above.


Signed in the presence of

Weerawarna Ranpatabendige Dixon Nilaweera
Secretary To The Treasury
For and on behalf of The Government of the Democratic Socialist Republic Of Sri Lanka

Name: Dr. P. B. Jayasundera
Title: Deputy Secretary to the Treasury
GOSL

Sheikh Ahmad Bin Saeed Al-Maktoum
Chairman, Emirates,
the International Airline of the U.A.E.
For and on behalf of
Emirates, the International Airline of the U.A.E.

Name: MAURICE FLANAGAN
Title: MANAGING DIRECTOR
EMIRATES




**Present AirLanka route network 1997/98**

*மேலும் 2006 இல் ஊடகங்களில் ஆசிரியர் பிரசுரித்த ஆய்வுக்கட்டுரையில் எவ்வாறு பெற்றோலிய சில்லறை சந்தையின் தனியார்மயமாக்கலின் போது அதன் சில பகுதிகளை இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்தமையானது நாட்டிற்கும் மக்களுக்கும் பாரிய இழப்பினை ஈட்டித்தந்ததுடன் இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனத்திற்கு அசாதாரண நன்மைகளை பெரும் வகையில் அமைந்தது என்பதனை தெளிவாக வெளிப்படுத்துகிறார். இது ஆதாரங்கள் மற்றும் தரவுகளுடன் எவ்வாறு இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் மிகவும் இலாபமீட்டும் 100 பெற்றோலிய சில்லறை விற்பனை நிலையங்களின் விற்பனையானது விசாரிக்கப்பட்டும் நன்கு வெளிப்படுத்தப்பட்டும் இருக்கின்றது.*

*மேலும் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவை முன்வைத்த ஒப்புதல் நிபந்தனைகளுக்கு முரணாக இப்பரிமாற்றங்கள் இடம்பெற்று இலங்கை அரசாங்கத்திற்கு பாரிய இழப்பினை ஈட்டித்தந்தது. பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவராக நூலாசிரியர் பணியாற்றியபொழுது உரிய சட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக எடுத்ததன் மூலம் இவ்விழப்புக்களை குறைக்கமுடிந்தது, இதற்காக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிரூபமா ராவோ அவர்களின் தலையீட்டினையும் அழுத்தங்களையும் கூட நூலாசிரியர் விமர்சித்திருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களும் தமது பதவியினை ஏற்றதன் பின்னர் நாட்டின் நலனுக்காக நூலாசிரியர் அச்சமின்றி முன்னெடுத்த நிலைப்பாடு குறித்து தமது பாராட்டுதல்களை தெரிவித்திருந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது*

මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
**MINISTRY OF FINANCE AND PLANNING**

The Secretariat, Colombo 01.

Office 2484500, 2484600, 2484700 | Fax (94)-011-2449823 | Website www.treasury.gov.lk

My No. | Your No. | Date 4th April, 2005

Chairman
Public Enterprise Reform Commission

Dear Sir,

**PAYMENT OF SUBSIDY TO LANKA IOC**

Lanka IOC has submitted several claims pertaining to the subsidy as per the pricing formula attached to the agreement signed between GOSL and LIOC.

Since you had already expressed concern over this pricing formula and the amount involved, I shall be grateful if you could examine their claims and make a suitable recommendation for the government for an early settlement of the outstanding amounts.

Since the formula prices have been computed on a rising market, it appears that the pricing formula has given much more return on investment than expected from such investment. I recall that you have made a strong argument in this regard. Therefore, please be kind enough to provide a suitable modification to the agreement.

Yours faithfully,

P B Jayasundera
**Secretary to the Treasury**

PUBLIC ENTERPRISES REFORM COMMISSION OF SRI LANKA
RECEIVED
05 APR 2005

*“ஜூன் 13, 2006*

*அதிமேதகு நிருபமா ராவோ*
*இலங்கைக்கான இந்தியத் தூதுவர்*
*36-38, காலி வீதி*
*கொழும்பு - 03*

*அதிமேதகு தூதுவர் அவர்களே*

***இந்திய எண்ணெய் கூட்டுத்தாபனம் (IOC) / வரையறுக்கப்பட்ட இலங்கை IOC. (LIOC)***

*XXXXXXXXXXXXXXXXXXXXXX*

*இறுதியாக பின்வரும் நீதிபதி டென்னிங் பிரபு அவர்களின் தீர்ப்புக்களானது சிலவேளைகளில் இராஜதந்திர செல்வாக்குகள் மற்றும் நுட்பங்கள் காணப்படும் சூழ்நிலையில் ஏற்புடையதாகவும் பொருத்தமாகவும் இருக்கும் (1977) 1 ALL ER @892*

*" இம் முரண்பாடுகள் குறித்து கேள்வி எழுமாயின், உதாரணமாக, வெளிநாட்டு அரசாங்கமொன்றின் சர்வதேச அல்லது சட்டரீதியான பரிமாற்றம் அல்லது அதன் நிர்வாகிகளின் கொள்கை போன்ற சந்தர்ப்பங்களில், நீதிமன்றமானது "வழக்கு தொடரமையினை" (Immunity) அது வேண்டப்படும் பட்சத்தில் வழங்குதல் வேண்டும். ஏனெனில் ஒரு நாட்டின் உள்நாட்டு நீதிமன்றங்களில் இவ்வாறான முரண்பாடுகள் குறித்து பிரசாரம் செய்யப்படுதலானது நிச்சயமாக ஓர் வெளி நாட்டின் இறைமைக்கும் மரியாதைக்கும் பாதகமாக அமையும்; இம்முரண்பாடுகள், உதாரணமாக, ஓர் வெளிநாட்டு அரசாங்கத்தின் வர்த்தக பரிமாற்றமானது (தனது சொந்த திணைக்களங்களாலோ, அல்லது அதன் முகவர்களாலோ அல்லது இதற்கென அமைக்கப்பட்ட தனியான சட்ட நிறுவனங்களாலோ மேற்கொள்ளப்படும் பரிமாற்றம்) எமது நாட்டின் நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குறப்பட்டதாக அமையும் பட்சத்தில், இவ் பல்லக்கு தொடராமையினை (Immunity) வழங்குவதற்கு எந்த அடிப்படையும் இல்லை." - ஹைதராபாத் இன் ரஹீம்டூலா எதிர் நிசாம் வழக்கு*

*"..... வெளிநாட்டு அரசிற்கு, உள்நாட்டின் வர்த்தக பரிமாற்றத்தின் ஈடுபடும் போது எமது நீதிமன்றத்தின் சட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டவிதமாக முரணமாடுகள் ஏற்படும் பட்சத்தில் வழக்கு தொடராமை (immunity) வழங்கப்பட மாட்டாது. ஒரு வெளிநாட்டு அரசாங்கமானது லண்டன் சந்தையில் கொள்வனவுகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றுடன் இணைந்துகொள்ளுமாயின் அல்லது அதற்கு பால்டிக் பரிமாற்றத்தில் கப்பல்களை வாடகையமர்த்தும் தேசிய திணைக்களம் ஒன்று காணப்படுமாயின் இதன்மூலம் அது உலக சந்தையில் காலடி எடுத்து வைக்கின்றது. இதன்படி அது அச்சந்தையின் சட்டங்களுக்கு அமைவாக நடத்தல் வேண்டும் என்பதனை சர்வதேச குழு எதிர்பார்க்கின்றது.*

*XXXXXXXXXXXXXXXXX*

*அதிமேதகு தூதுவர் அவர்கள் இவ்விடயத்தில் தலையிட்டது போலவே, IOC யானது தனது அடிப்படை பொறுப்பும் கடமையுமான மிகுதித் தொகையான அமெரிக்க டொலர் 35 மில்லியன் இணை அந்நிய செலாவணியாக முதலீடு செய்வதனை உறுதி செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.*

*இங்கணம் உண்மையுள்ள*

*நிஹால் ஸ்ரீ அமரசேகர*

*பிரதிகள் - செயலாளர், நிதி அமைச்சு*
*கணம். வெளிவிவகார அமைச்சு*
*அதிமேதகு, ஜனாதிபதி”*

*1998 நவம்பரில் வெளியான ஆசிரியரின் ஆய்வுக்கட்டுரையில் தனது "இலங்கை பெருந்தோட்டத் துறையின் கொள்ளையடிப்பு " எனும் புத்தகத்தினை மேற்கோள் காட்டி குறிப்பாக, எவ்வாறு ஹாங் காங் இன் கம்பெனி ஒன்றிற்கு நிலங்கள் சந்தேகத்திற்குரிய மற்றும் கேள்விக்குரிய முறையில் வழங்கப்பட்டது என்பதனை வெளிப்படுத்துகிறார்*

மேலும் நாட்டின் பொதுமக்களிடையே பெரும் சர்ச்சையினை ஏற்படுத்திய கொழும்பு வாட்டர்ஸ் எட்ஜ் கோல்ப் மைதான பணியின் பரிமாற்றம் தொடர்பான அதிர்ச்சிகரமான மோசடி தொடர்பாகவும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினாலும் வேறு சில முக்கிய பிரமுகர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஊழல் மற்றும் மோசடியான சிக்கலான பரிமாற்றத்திநை தரவுகளுடனும் ஆதார ஆவணங்களுடனும் துரிதமாக செயட்பட்டதன் விளைவாக இலங்கையின் உச்ச நீதிமன்றமானது *SC (FR)* விண்ணப்ப இல. *352/2007* இனால் இப்பரிவர்தனைகளை இரத்துசெய்தது. இதன்படி உச்ச நீதிமன்றமானது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு *3* மில்லியன் ரூபாயினை அபராதமாக அரசிற்கு செலுத்தும் படியும் ஏனைய தவறிழைத்தோருக்கு முறையே *2* மில்லியன் ரூபாய், மற்றும் *1* மில்லியன் ரூபாயினை அபராதமாக கீழே தரப்பட்டுள்ள தீர்ப்பின் பகுதிகளின்படி அரசிற்கு செலுத்தும்படி ஆணையிட்டது.

මුදල් සහ ක්‍රම සම්පාදන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் அமைச்சு
MINISTRY OF FINANCE AND PLANNING

FPE/DP/02/65*(23) Your No.

The Secretariat, Colombo 01

TRUE COPY
Sgd. Sumanasiri Associates
Attorneys-at-Law for Petitioner

CABINET MEMORANDUM

*Ministry of Finance & Planning*

**RELEASE OF LAND ON CONCESSIONARY TERMS - ASIA PACIFIC GOLF COURSES LTD.**

On 14th May 1997, Board of Investment approved a proposal submitted by Asia Pacific Golf Courses Ltd. (APGC) to set up an 18-hole Golf Course of international standards within a 136 acre block of land at Battaramulla, belonging to the UDA In addition, the investors have proposed the construction of a park, football pitch, cricket pitch and a hawker centre for the purpose of selling food items, which will be made available to the public.

**XXXXXXXXXXXXXXXXXXX**

Accordingly, I recommend that this land be allocated on the basis of lease rent being calculated at 2% of market value as determined by the Chief Valuer during the first five years and 4% thereafter, in keeping with the Cabinet decision of 08th October 1997.

**XXXXXXXXXXXXXXXXXXX**

Chandrika Bandaranaike Kumaratunga
Minister of Finance & Planning

09th February 1998.

இதற்கு மேலதிகமாக, உச்ச நீதிமன்றத்தின் பிறிதொரு வழக்கான, முன்னாள் ஜனாதிபதியொருவரின் ஓய்வுகால நன்மைகள் தொடர்பான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் *SC (FR)* விண்ணப்ப இல. *503/2005* இன் படியானநடைமுறையிலுள்ள சட்டத்தின் பிரகாரம் இலங்கை உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை பகுப்பாய்வு ரீதியாக வெளிப்படுத்துகிறார்.

மேற்குறிப்பிட்டபடி *1995* இற்கும் *1999* இற்கும் இடைப்பட்ட காலத்திற்கான பரிவர்த்தனைகள் மோசடியானதும் சந்தேகத்திற்குரியதாகவும் ஆராய்ந்து வெளிப்படுத்தப்பட்ட போதும், கடந்த அரசாங்கத்தின் போதான ஓர் தனியார்மயமாக்கல் பரிவர்த்தனையான நைலான் *6* ஆலையின் விற்பனையானது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அமைக்கப்பட்ட சிறப்பு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அதேசமயம் விசாரணை செய்யப்பட்டது

Sinhala and Tamil versions of this Report will be printed separately.

SESSIONAL PAPER No. I – 1997

**FOURTH INTERIM REPORT SUBMITTED TO HER EXCELLENCY THE PRESIDENT BY THE SPECIAL PRESIDENTIAL COMMISSION OF INQUIRY, 1995 APPOINTED TO INQUIRE INTO ALLEGED MALPRACTICES IN CERTAIN GOVERNMENT BODIES**

*Printed on the orders of the Government*

**2nd March, 1997**

PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA.
TO BE PURCHASED AT THE GOVERNMENT PUBLICATIONS BUREAU, COLOMBO 07.

**Price : Rs. 120.00** **Postage : Rs. 10.00**

1—D 044754–1,893–(21/06)



**Justice H.S. Yapa** **Justice P.R.P. Perera** **Justice F.N.D. Jayasuriya**

*விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவானது இந்த பரிமாற்றமானது பிழை என கண்டதுடன், அரசாங்கத்திற்கு பாரிய இழப்பு ஏற்பட்டதை நிரூபிப்பதற்கு முன்னர் குறித்த அமைச்சர் இறந்துவிட்ட காரணத்தினால் எவ்வித தீர்ப்பையும் வழங்காமல் எவ்வாறெனினும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவானது குறித்த அமைச்சின் செயலாளருக்கு எதிராக தீர்ப்பொன்றை வழங்கியதுடன் அவரது சிவில் உரிமைகளையும் இல்லாமல் செய்தது.*

*விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட தரவுகளின் பிரகாரம் சில பரிமாற்றங்கள் ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து ஆலோசகராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் வரவழைக்கப்பட்ட அவருடைய நம்பிக்கைக்குரியவரான ராஜன் பிரிட்டோவின் ஆதரவோடும் பங்களிப்போடும் இடம்பெற்றவையாக இருந்தமையானது ஆச்சரியமாக வெளிகொண்டு வரப்பட்டுள்ளதல்லவா? மேற்குறித்தது போலான நடவடிக்கைகளை இவ்வாறான நபர்கள் மீதும் ஏனையோர்மீதும் எடுக்காமையானது உயர் மட்டத்திலிருப்போர் அரசியல் பலத்தோடு இருக்கையில் அவர்கள் மீது சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதில்லை என்பது தெளிவாக புலப்படுகிறது.*

*இப்புத்தகத்தில் கூறப்பட்டிருப்பது போல சில முக்கியமான மோசடியானதும் ஊழல்மிக்கதுமான பரிவர்த்தனைகள் தொடர்பாக தரவுகள், ஆவணங்கள் மற்றும் உண்மைத் தகவல்களுடன் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும், அப்போதைய இலங்கையின் அரசாங்கமானது சட்டங்களை அமுல்படுத்துவதில் தவறியிருந்தது அத்தோடு சட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரிகளும் வெளிப்படுத்தப்பட்ட மோசடி மற்றும் ஊழல் நிறைந்த பரிவர்த்தனைகள் குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்காமையானது சமூகத்தின் மேல்நிலையியுள்ள சமூகங்கள் தொடர்பான சமூக மற்றும் அரசியல் யதார்த்தங்களை தெளிவாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்துகிறது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் பின்னரும், இச் சட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையினையும் எடுக்கவில்லை.. இது ஓர் அச்சுறுத்தலைக்கும் நிலையில்லையா ?*

*இதனைக்காட்டிலும் அச்சுறுத்தலான நிலைமை யாதெனில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் கடந்த அரசாங்கத்தின் காலத்திலான ஊழல் மற்றும் மோசடிமிக்க பரிமாற்றங்களை விசாரணை செய்ய விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவினை அமைத்திருந்த அதே நேரம் அவரது நம்பிக்கைக்குரியவர் பொது நிறுவன சீர்திருத்த ஆணைக்குழுவினூடாக மேற்கூறிய மோசடியான தனியார்மயமாக்களினை மேற்கொண்டனர் மேலும் மோசமான நிலை யாதெனில் சட்டங்களை அமுல்படுத்தும் வகையில் இவர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் ஜனாதிபதியின் தலைமையிலும் எடுக்கப்படாமையே.*

*மேலும் சமூக அரசியல் காரணங்களுக்காக அவர்கள் அரசியல் அதிகாரத்தில் இருக்கும் காலத்தில் சட்ட நடைமுறைகள் தந்திரமான முறையில் அமுல்படுத்தப்படாமையானது அவர்களது இரட்டை வேடத்தினையே வெளிப்படுத்துகிறது.*

***மேலதிக தகவல்களிற்கு : [http://www.consultants21.com/fraud-&-corruption-exposures-new.php](http://www.consultants21.com/fraud-&-corruption-exposures-new.php)***